செய்தி வெளியீடு எண். 174 நாள் :30.03.2017

**திருவள்ளூர் மாவட்டம், ஊத்துக்கோட்டை வட்டம், வட்டாட்சியர் அலுவலகத்தில் மொத்தம் 281 பயனாளிகளுக்கு ரூ. 4 இலட்சத்தி 34 ஆயிரத்து 500-க்கான இலவச வீட்டுமனை பட்டா மற்றும் நலத்திட்ட உதவிகளை மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.எ.சுந்தரவல்லி,இ.ஆ.ப., அவர்கள் மற்றும் கும்மிடிப்பூண்டி சட்டமன்ற உறுப்பினர் திரு.கே.எஸ். விஜயகுமார் ஆகியோர் வழங்கினார்கள்.**

~~~~~

திருவள்ளூர் மாவட்டம், ஊத்துக்கோட்டை வட்டம், வட்டாட்சியர் அலுவலகத்தில் மொத்தம் 281 பயனாளிகளுக்கு ரூ. 4 இலட்சத்தி 34 ஆயிரத்து 500-க்கான இலவச வீட்டுமனை பட்டா மற்றும் நலத்திட்ட உதவிகளை மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.எ.சுந்தரவல்லி,இ.ஆ.ப., அவர்கள் மற்றும் கும்மிடிப்பூண்டி சட்டமன்ற உறுப்பினர் திரு.கே.எஸ். விஜயகுமார் ஆகியோர் இன்று (30.03.2017) வழங்கினார்கள்.

ஊத்துக்கோட்டை வட்டத்தை சார்ந்த 222 நபர்களுக்கு இலவச வீட்டுமனை பட்டா, 15 நபர்களுக்கு முதியோர் உதவித்தொகைக்கான ஆணைகள், மாண்புமிகு முதலமைச்சரின் உழவர் பாதுகாப்புத்திட்டத்தின் கீழ் 9 பயனாளிகளுக்கு திருமண உதவித்தொகை (9Xரூ.8000-ரூ.72000), 6 பயனாளிகளுக்கு இயற்கை மரணம் மற்றும் ஈமச்சடங்கு உதவித்தொகை(5Xரூ.12500-ரூ.62500, 1Xரூ.10000 மொத்தம் ரூ.72500), முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து சாலை விபத்து நிவாரணத் தொகை 5 நபர்களுக்கு ரூ. 2 இலட்சத்தி 90 ஆயிரத்திற்கான தொகையாக மொத்தம் ரூ. 4 இலட்சத்தி 34 ஆயிரத்தி 500–க்கான நலத்திட்டம் வழங்கப்பட்டது.

மாவட்ட ஆட்சியர் அவர்கள் கூறியதாவது “ஊத்துக்கோட்டை வட்டத்தை சேர்ந்த மக்களுக்கு வீட்டு மனை பட்டாக்கள் அரசின் சார்பாக விலையில்லாமல் வழங்கப்படுகிறது. இதனை நடத்திய வருவாய் துறையை சேர்ந்த அலுவலர்கள் அனைவருக்கும் மாவட்ட நிர்வாகத்தின் சார்பாக பாராட்டுகளை தெரிவித்துக் கொள்கிறேன். தமிழக அரசு பல்வேறு நலதிட்டங்களை செயல்படுத்தி வருகிறது. இதில் குறிப்பாக உழவர் பாதுகாப்பு திட்டம் அனைத்து விவசாயிகளுக்கும் திருமண உதவிதொகை (ஆண்கள் மற்றும் பெண்கள் ரூ. 8 ஆயிரம்), கல்வி உதவிதொகை, இயற்கை மரணம் மற்றும் ஈமச்சடங்கு உதவிதொகை மற்றும் விபத்து நிவாரண உதவிதொகை ஆகியவை வழங்கப்படுகிறது. இதனை அனைத்து விவசாயிகளும் பயன்படுத்திக்கொள்ள வேண்டும். தாலிக்கு தங்கம் வழங்கும் திட்டத்தின் மூலம் பெண்களுக்கு திருமணத் தொகையுடன் திருமாங்கல்யத்திற்கு தங்கம் வழங்கும் திட்டத்தினால் பெண் கல்வி ஊக்குவிக்கப்படுகிறது. அதுமட்டுமில்லாமல் பெற்றோர்களின் திருமண சுமையை குறைப்பதாக உள்ளது. சுகாதாரத்துறை மூலம் மருத்துவ காப்பீட்டு அட்டை வழங்கப்படுகிறது. இதன் மூலம் 1063 வகையான நோய்களுக்கு சிகிச்சைகள் மேற்கொள்ளலாம்.

குடிநீர் தட்டுப்பாடு குறித்து புகார்களை தெரிவிக்க 1077 என்ற எண்ணை தொடர்பு கொண்டு மாவட்ட ஆட்சியரகத்தில் செயல்பட்டு வரும் கட்டுப்பாட்டு அறையில் புகார்களை தெரிவிக்கலாம். மக்கள் அனைவரும் தண்ணீர் பயன்பாட்டினை சிக்கனமாக பயன்படுத்த வேண்டும். மழை பெய்யாத காரணத்தினால் தண்ணீர் தட்டுப்பாடு ஏற்படும் நிலை உருவாகி உள்ளது. எனவே அனைவரும் தண்ணீரை சிக்கனமாக பயன்படுத்த வேண்டும். சீமை கருவேல மரங்களை அகற்ற அரசு உத்தரவிட்டதை தொடர்ந்து அரசு மற்றும் தனியார் நிலங்களில் உள்ள சீமை கருவேல மரங்கள் அகற்றப்பட்டு வருகிறது. பொது மக்கள் அனைவரும் சீமை கருவேல மரங்களை அகற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும். மேலும் திருவள்ளூர் மாவட்டத்தில் 9 மாதம் முதல் 15 வயது உள்ளவர்களுக்கு தடுப்பூசி போடப்பட்டு வருகிறது. இந்த தடுப்பூசி மூலம் தட்டமை மற்றும் மணல்வாரி அம்மை நோய்கள் ஆகியவை தடுக்கப்படும். மாவட்டத்தில் 5,60,704 குழந்தைகளுக்கு தடுப்பூசி போட திட்டமிடப்பட்டு கிட்டதட்ட 5 இலட்சம் (அ) 95 சதவிகித குழந்தைகளுக்கு தடுப்பூசி போடப்பட்டுள்ளது. இந்த தடுப்பூசியினால் குறிப்பாக பெண் குழந்தைகளுக்கு 30 வகையான நோய்கள் முற்றிலுமாக தவிர்க்கப்படும். எனவே பெற்றோர்கள் அனைவரும் தங்கள் குழந்தைகளுக்கு தடுப்பூசி போட வேண்டும்” என்று கூறினார்.

இந்நிகழ்ச்சியில் திருவள்ளூர் வருவாய் கோட்டாட்சியர் திருமதி.கெ.ரா திவ்யஸ்ரீ, ஊத்துக்கோட்டை வட்டாட்சியர் திருமதி. கிருபாஉஷா மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருவள்ளூர்.**
~~~~~